2015 ஆகஸ்ட் 26]

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் முடிந்தவுடன், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

பயணியர் மாளிகை

***34796—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பயணியர் மாளிகை கட்ட அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கையர்க்கோர் அரசி, மாதர்குல தெய்வம், தீயோரின் சூழ்ச்சியால் காவேரியைப் போல் தடைகள் கரைபுரண்டு வரினும் அத்தனையையும் துணிவுடன் சிங்கமென எதிர்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிவாகை சூடி ஐந்தாம் முறையாகத் தமிழக முதல்வராக ஆட்சி செய்யும், எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

பூம்புகார் தொகுதியில் உள்ள செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தாலுகா அலுவலகம், உதவிப் பொறியாளர் அலுவலகம், ஒன்றிய அலுவலகம் மற்றும் புகழ்வாய்ந்த புராதனக் கோயில்களான திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமி கோயில், நவக்கிரகங்களில் ஒன்றான கீழப்பெரும்பள்ளம் கேது ஸ்தலம், புகழ்வாய்ந்த தரங்கம்பாடி, டேனிஷ் கோட்டை போன்ற இடங்கள் உள்ளதால், இங்கு வரும் பயணிகளின் நலன் கருதி, ஒரு பயணியர் மாளிகை கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவிலிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை நகரில் உள்ள பயணியர் மாளிகை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பயணியர் மாளிகையைக் கட்டுவதற்கான தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதிக்கு வரும் பயணிகள் தங்கவேண்டுமானால் இங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மயிலாடுதுறையிலும், 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சீர்காழியிலும் இருக்கும் அரசு பயணியர் மாளிகைகளில்தான் தங்க வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'மக்கள் நலனே தன் நலன்' என்று வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பயணியர் மாளிகை கட்டித் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய காலங்களில் அரசு அதிகாரிகள் ஆய்வுப் பணிகளுக்குச் செல்கின்ற இடங்களில் தங்குவதற்கு தகுந்த வசதி இல்லாத காரணத்தினால், பல இடங்களில் பயணியர் விடுதிகள் மற்றும் ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டன. தற்போதைய காலத்தில் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளிலும் தங்குவதற்கு நல்ல இடங்கள் உள்ளன. எனவே, தேவைப்படும் இடங்களில் மட்டும் பயணியர் மாளிகைகள் கட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 4 ஆண்டுகால பொற்கால ஆட்சியில், 2011-2012 ஆம் ஆண்டில் 17 பயணியர் மாளிகைகளும், 2012-2013 ஆம் ஆண்டில் 7 பயணியர் மாளிகைகளும், 2013-2014 ஆம் ஆண்டில் 8 பயணியர் மாளிகைகளும், 2014-2015 ஆம் ஆண்டில் 5 பயணியர் மாளிகைகளும், ஆக மொத்தம் 37 பயணியர் மாளிகைகள் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி முதல் சென்னை வரை இருக்கக்கூடிய* E.C.R. *என்று சொல்லக்கூடிய கிழக்குக் கடற்கரை சாலையை எங்களிடம் ஒப்படைத்தால், அதனை மேம்பாடு செய்யத் தயாராக இருப்பதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் ஒருவர் பேசியிருந்தார். இந்த விஷயத்தில் நமது தமிழக அரசினுடைய நிலைப்பாடு என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட* E.C.R. *சாலையில் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் டெண்டர் விடப்பட்டிருக்கிறது. குறுகிய காலத்தில் அந்தப் பணிகள் துவங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2015 ஆகஸ்ட் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகை கடந்த 100 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு, பழுதடைந்து, பயன்படுத்தாத நிலையிலே பழமையாக இருந்து வருகிறது. அதற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். மதுரையிலிருந்து 40 கிலோ மீட்டர் மற்றும் தேனியிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற அந்தப் பயணியர் மாளிகையைப் புதிதாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பயணியர் மாளிகை மிகவும் பழுதடைந்து இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிதிநிலைக்கேற்ப எதிர்வருகின்ற காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே புதிய பயணியர் மாளிகை கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் பேரூராட்சிப் பகுதியிலிருந்து பிரிந்து திருப்பனந்தாள், திருப்பனந்தாள் வடக்குத் தெரு, சிக்கல்நாயக்கன்பேட்டை, கொண்டசமுத்திரம் வரை செல்கின்ற 5 கிலோ மீட்டர் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. திருப்பனந்தாள் பேரூராட்சியினுடைய அதிகாரியை அணுகி, பேரூராட்சிக்குட்பட்ட சாலை பழுதடைந்திருக்கிறது, இதைச்*

சரிசெய்யுங்கள் என்று பலமுறை சொன்னபோதும், அது நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலையாக இருக்கிற காரணத்தினால், பேரூராட்சியின் சார்பாக நாங்கள் செய்ய முடியாது என பதில் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பல முறை கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பனந்தாளிலிருந்து கொண்டசமுத்திரம் வரை செல்கின்ற அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தருவார்களா, புதிய சாலையை அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பயணியர் மாளிகை கட்டுவது தொடர்பான வினா. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சிப் பகுதியில் சாலை மோசமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்காண்டு காலத்திலே கிட்டத்தட்ட 41,257 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கடந்த கால ஆட்சியில் சரியான முறையில் சாலைகள் சீரமைக்கப்படாத காரணத்தினால்தான், நாங்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகு, படிப்படியாக, ஒவ்வோர் ஆண்டும் அதிகமாக சேதமடைந்துள்ள சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, அவை சீர் செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, எதிர்வரும் காலத்தில் சீரமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*